**புதுச்சேரி அரசு**

**பள்ளிக்கல்வி இயக்ககம்**

**தென்னிந்திய அறிவியல் கண்காட்சி தொடக்க விழா**

***

<u>செய்தி குறிப்பு</u>

புதுச்சேரி பள்ளிக் கல்வி இயக்ககமும் பெங்களூரு விஸ்வேஸ்வரய்யா தொழில் மற்றும் தொழில் நுட்ப அருங்காட்சியகமும் இணைந்து நடத்தும் தென்னிந்திய அறிவியல் கண்காட்சி புதுச்சேரி செல்லப்பெருமாள்பேட்டை விவேகானந்தா மேல்நிலைப்பள்ளி வளாகத்தில் ஜனவரி 5 ஆம் தேதி தொடங்க உள்ளது. ஐந்து நாட்கள் நடைபெறுவிருக்கும் இக்கண்காட்சியினை மாண்புமிகு துணைநிலை ஆளுநர் முனைவர் கிரண்பேடி தொடங்கி வைக்கிறார்.

இக்கண்காட்சியில் மாண்புமிகு முதலமைச்சர் வே.நாராயணசாமி தலைமை உரையாற்றுகிறார், மாண்புமிகு மின்துறை மற்றும் பள்ளிக்கல்வி அமைச்சர் இரா.கமலக்கண்ணன், மாண்புமிகு துணை சபாநாயகர் வே.பொ. சிவக்கொழுந்து, தலைமைச் செயலர் திரு.மனோஜ் பரிதா, கல்விச் செயலர் திரு.அருண் தேசாய், பெங்களூரு விஸ்வேஸ்வரய்யா தொழில் மற்றும் தொழில் நுட்ப அருங்காட்சியக இயக்குநர் திரு.கே.ஜி.குமார் ஆகியோர் வாழ்த்துரை வழங்க உள்ளனர்.

இத்தென்னிந்திய அறிவியல் கண்காட்சியில் புதுச்சேரி, தமிழ்நாடு, ஆந்திரா, கர்நாடகா மற்றும் கேரளா மாநிலத்தைச் சேர்ந்த மாணவர்கள் மற்றும் ஆசிரியர்களின் படைப்புகள் **"நாட்டின் முன்னேற்றத்திற்கு அறிவியல் தொழில் நுட்பம் மற்றும் கணிதம்"** என்ற கருப்பொருளை முதன்மையாகக் கொண்டு **உடல்நலம், தொழில், போக்குவரத்து மற்றும் தகவல் தொடர்பு, உணவு உற்பத்தி மற்றும் உணவுப் பாதுகாப்பு, அன்றாட வாழ்வில் கணிதத்தீர்வு** போன்ற துணைக் கருப்பொருளில் இடம் பெறுகின்றன. ஒவ்வொரு மாநிலத்தில் இருந்தும், மாணவர்கள் குழுக்களாக (group exhibit) தயார் செய்த 15 படைப்புகளும், மாணவர்களின் திறனை வெளிப்படுத்தும் 20 தனிப்படைப்புகளும் (individual exhibit), ஆசிரியர்களின் 15 படைப்புகளும் என்ற அடிப்படையில் ஐந்து மாநிலங்களிலிருந்து மொத்தம் 250 அறிவியல் படைப்புகள் இக்கண்காட்சியில் இடம்பெற உள்ளன.

மேலும், புதுச்சேரி பகுதியிலுள்ள அனைத்து பள்ளிகளைச் சேர்ந்த மாணவ மாணவியர் மற்றும் பொதுமக்கள் இக்கண்காட்சியை பார்வையிடுவதற்கு வசதியாக கீழ்கண்ட அட்டவணைப்படி கால ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது:

1. 05.01.2017 – 10AM – 1 PM - புதுச்சேரி கொம்யூன்
2. 05.01.2017 – 2 PM – 4 PM - அரியாங்குப்பம் கொம்யூன்
3. 06.01.2017 - 10 AM - 1 PM - உழவர்கரைக் கொம்யூன்
4. 06.01.2017 - 2 PM – 4 PM - மண்ணாடிப்பட்டு கொம்யூன்
5. 07.01.2017 - 10 AM - 1 PM - வில்லியனூர் கொம்யூன்
6. 07.01.2017 - 2 PM - 4 PM - நெட்டப்பாக்கம் கொம்யூன்
7. 08.01.2017 - 10 AM - 1 PM - பொது மக்கள் மற்றும் அருகாமையில் உள்ள மாநிலங்கள்
8. 08.01.2017 – 2 PM - 4 PM - பாகூர் கொம்யூன்

கண்காட்சி நடைபெறும் அனைத்து நாட்களிலும் பொதுமக்கள் பார்வையிடுவதற்கு வசதியாக மாலை 4 மணி முதல் 5 மணிவரை நேரம் ஒதுக்கப்பட்டுள்ளது. மேலும், கலை நிகழ்ச்சிகளுக்கும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. வெளி மாநிலங்களைச் சேர்ந்த பங்கேற்பாளர்கள் புதுச்சேரி வரலாற்றுத் தலங்களை பார்வையிடவும் கல்வித்துறை சிறப்பு ஏற்பாடு செய்துள்ளது.

**சிறப்புப் பணி அதிகாரி**
**மாநிலப் பயிற்சி மையம்**
**புதுச்சேரி**